கழக வெளியீடு, ௧௧௯௪

[நான்காம் புத்தகம்]

ஆசிரியர் :

N K வேலன்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
திருநெல்வேலி - 6. சென்னை - 1.
1963

என். குழந்தைவேலன் (1907)

© 1963 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED

Ed 1 July 1963

P31,J9(5)
w3K3·4

AYAL NATTUK KATHAIKAL - IV

Appar Achakam, Madras - 1.

பதிப்புரை

அயல்நாட்டுக் கதைகள் என்னும் கழகச் சிறுகதை வரிசையில் இது நான்காம் புத்தகமாகும். இளைஞர்க்கேற்ற இனிய கதைகள் பலவற்றை எழுதியுதவிய திரு. என். கே. வேலன் அவர்களே இச் சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

கழகவழி வெளிவந்துள்ள பிற கதை நூல்களைப் போலவே இதனையும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் வாங்கிச் சிறுவர்கள் படித்து மகிழுமாறு செய்வார்களென நம்புகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

		பக்கம்
1.	கரடி அரசன்	1
2.	பெரிய பெருமாள்	12
3.	ஒளி வட்டம்	22

கரடி அரசன்



இமய மலையின் அடிவாரத்தில் ஒரு சிறிய வீடு இருந்தது. அதில் ஓர் ஏழை மனிதன் வசித்துவந்தான். அவனுக்குப் பதினாறு குழந்தைகள் இருந்தன. அவர்களுக்கு எல்லாம் போதுமான உணவு கொடுக்க அவனால் முடியவில்லை. அவன் விறகு வெட்டிப் பிழைத்து வந்தான்.

குளிர்காலம் வந்துவிட்டது. கு
தைகள் குளிரில் நடுங்கின. பசி
வாடின. அடுப்புக்கு அருகில்
எல்லோரும் குளிர் காய்ந்து
இருந்தனர்.

கதவு தட்டும் ஓசை கேட்டது. ‘இரவு நேரத்தில் யார் வந்திருக்கிறார்கள்?’ என்று வீட்டுக்கார அம்மாள் கேட்டாள். புயல் காற்று அடித்துக் கொண்டு இருந்தது.

‘யார் என்று தெரியவில்லை. நான் போய்ப் பார்க்கிறேன்’, என்று அப்பா போனார். கதவைத் திறந்தார். வாசற்படியில் ஒரு பெரிய கரடி நின்றுகொண்டு இருந்தது. மழையில் நனைந்திருந்தது.

...என்ன வேண்டும்?’ என்று விறகு ...உ கேட்டான்.

...னக்கு ஒரு பெண் வேண்டும்’, ...ரடி சொல்லிற்று.

'எங்கள் வீட்டில் நிறையக் குழந்தைகள் இருக்கின்றன; அதில் ஒன்றைக் கொடுத்து விடுவேன் என்று பார்க்கிருயா? பெண் எதற்கு? எடுத்து விழுங்குவதற்கா?' என்று கேட்டான்.

'தின்பதற்கு அன்று. என் வீட்டைப் பார்த்துக் கொள்வதற்கு ஒரு பெண் வேண்டும். நான் தனிமையாக இருக்கிறேன். எனக்கு ஒரு பெண் கொடுத்தால் உன்னைப் பணக்காரன் ஆக்கிவிடுகிறேன்,' என்று கரடி சொல்லிற்று.

விறகு வெட்டிக்குக் கையில் பணமில்லை. சாப்பாட்டுக்குத் திண்டாட்டம். என்ன செய்வான் பாவம்! 'நாளைக்கு வந்தால் பதில் சொல்கிறேன்,' என்று கரடியை அனுப்பிவிட்டான்.

கதவை மூடிவிட்டு உள்ளே வந்தான். 'கரடி வீட்டிற்குப்போய் யாராவது குடும்பம் நடத்துகிறீர்களா?' என்று தன் பெண்களிடம் கேட்டான்.

'முடியாது முடியாது,' என்று எல்லோரும் சொல்லி விட்டார்கள்.

'யாராவது ஒரு பெண் போனால் போதும். கரடியிடமிருந்து நமக்குப் பணம் கிடைக்கும். நாம் பணக்காரராக இருக்கலாம்,' என்று விறகு வெட்டி சொன்னான்.

'கரடியுடன் எப்படிக் குடி இருப்பது,' என்று ஒவ்வொரு பெண்ணும் மறுத்து விட்டனர். கடைசிப் பெண் உமாவைக் கேட்டான்.

'அப்பா! உங்களுக்காக நான் கரடியுடன் போகிறேன். நான் போய்விட்டாலும் நமது குடும்பமாவது சுகமாக இருக்கும்,' என்று கூறினாள்.

மறுநாள் இரவு கரடி வந்து கதவைத் தட்டிற்று. அப்பா அம்மா இருவரிடமும் விடை பெற்றுக்கொண்டு உமா வெளியில் சென்றாள். கரடியைக் கண்டதும் நடுநடுங்கினாள். மனதைத் திடம் பண்ணிக்கொண்டு, 'நான் வந்து உங்கள் வீட்டைப் பார்த்துக் கொள்கிறேன்,' என்று கரடியிடம் கூறினாள்.

'என் முதுகின்மேல் ஏறிக்கொள். என்னை நன்றாகப் பிடித்துக்கொள்,'

என்று கரடி சொல்லிற்று. அவளைத் தூக்கிக்கொண்டு மலைமேல் ஓடிற்று. மலையின்மேல் பனி மிகுதியாக இருந்தது. காற்று சில்லென்று அடித்தது.

மலைமேல் ஓர் அழகிய அரண்மனை இருந்தது. அது வெள்ளை வெளே ரென்று பனிக்கட்டிபோல் இருந்தது. கரடி உமாவை அரண்மனைக்குள் அழைத்துச் சென்றது. சுவர்களும் தரையும் பொன்னாலும் சலவைக் கல்லி னாலும் கட்டப்பட்டிருந்
இடங்களில் பட்டு
விரிக்கப்பட்டிருந்
முத்துக்கள் பதி

உமா அர
காலம் கழித்
கள் எல்லா
கள் அவ
கிடந்தன
வில்லா
காலம்
வாழ்ந்தி
எண்ணிக்

அவள் கரடியை அடிக்கடி சந்திப்ப தில்லை. சில சமயங்களில் கரடி அவள் இருக்கும் இடத்திற்கு வரும். அவளிடம் மிக்க அன்புடன் நடந்துகொள்ளும்.

இரவு நேரத்தில் கரடி அவள் எதி ரில் வருவதில்லை. அப்படி வந்தாலும் இருளில் மறைந்து நின்று கொண்டு பேசும். விளக்கு வெளிச்சத்தில் அது வருவதில்லை.

ன் ஒரு சாபத்திஞல் கட்டுப்பட்
ரவில் நீ என்னை ஒரு
ால் நாம் மறுபடி
து' என்றுகரடி
க் கரடி சொன்
பல நாட்கள்
ாணவேண்டு

உள்ளே
மல் திடீ
விளக்கு
தது?
? கரடிக்
அழகிய

இளவரசனைக் கண்டாள். ஆனால் அவன் மிக்க வருத்தத்துடன் தலை குனிந்து நின்றான்.

'நான் இப்பொழுது மந்திரக்காரியிடம் போய் அடிமையாக இருக்க வேண்டும். அவள்தான் என்னைக் கரடியாக மாற்றிவிட்டாள். இன்னும் சில நாட்கள் நீ பொறுமையோடு இருந்திருந்தால் சாபம் நீங்கி இருக்கும். நாம் இருவரும் மணம் செய்துகொண்டு அரசனாகவும் அரசியாகவும் இருந்திருக்கலாம்! என்ன செய்வது!' என்று வருந்தினான்.

உமா அழத் தொடங்கினாள். 'என்னால் அல்லவோ உங்களுக்கு இத்துன்பம் நேரிட்டது? என் உயிரை வேண்டுமானாலும் தருகிறேன். இதிலிருந்து தப்புவதற்கு வழி உண்டா?' என்று தேம்பினாள்.

'என்னைப் பின்தொடர்ந்து யாரும் வரக் கூடாது. மந்திரக்காரியின் வீடு ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் உள்ளது. அவள் இருக்கும் இடத்தை நான் சொல்லக்கூடாது. வழி தெரி

யாமல் அங்கே போகமுடியாது!' என்றான் இளவரசன்

'அந்த இடத்தின் பெயரை மட்டும் சொன்னால் போதும், நான் எப்படி யாவது வந்துவிடுகிறேன்,' என்று உமா கெஞ்சினாள்.

'நான்போகும் இடம் சஞ்சீவி மலை மேல் இருக்கின்றது. அதற்குமேல் நான் ஒன்றும் சொல்லக் கூடாது!' என்று சொல்லிவிட்டு இளவரசன் மாயமாய் மறைந்தான். அரண்மனையும் இருந்த இடம் தெரியவில்லை. உமா ஒரு பாறை யின்மேல் படுத்துக் கிடந்தாள். அது ஆள் அரவமே இல்லாத காடாக இருந்தது.

உமா குதித்து எழுந்தாள். இளவர சனைத் தேடிக்கொண்டு அங்கும் இங்கும் அலைந்தாள். பனியால் நனைந்து வெயி லால் உலர்ந்து பசியால் வாடினாள். பறவைகள் பழங்களைப் பறித்துக் கொண்டுவந்து அவள் காலடியில் போட்டன. அதுவும் இல்லாவிட்டால் அவள் எங்ஙனம் உயிரோடு வாழமுடி

யும்? சஞ்சீவி மலைக்குப் போவதற்கு வழி தெரியவில்லை. மனிதர்களே இல்லாத காடாக இருந்தது.

'சஞ்சீவி மலை எங்கே இருக்கிறது? உங்களுக்குத் தெரியுமா?' என்று பறவைகளிடம் கேட்டாள்.

'எங்களுக்குத் தெரியாது,' என்று பறவைகள் பறந்து போயின.

'அந்தப் பெயரையே நாங்கள் கேட்டதில்லை,' என்று மரங்கள் சொல்லின.

வாடைக் காற்று வீசிற்று. அது 'சஞ்சீவிமலை இருக்கும் இடம் எனக்குத் தெரியும், உன்னைக் கொண்டுபோய் விடுகிறேன் வா,' என்று உமாவைத் தூக்கிச் சென்றது. உமா காற்றின் உதவியால் வானத்தில் பறந்து சென்றாள். சஞ்சீவி மலையின் அருகில் வந்ததும் நறுமணம் வீசியது. 'இதுதான் சஞ்சீவி மலை!' என்று வாடைக் காற்று உமாவைக் கீழே இறக்கிவிட்டது. உமா மலைமேல் ஏறினாள். மலையின் உச்சியில் ஓர் அரண்மனை இருந்தது. முன்வாசலுக்குப் போய்க் கதவைத் தட்டினாள்.

'இளவரசர் இங்கே இருக்கிறாரா?' என்று காவலாளர்களைக் கேட்டாள்.

'ஆம் இருக்கிறார். உன்னைப் போன்ற பிச்சைக்காரியை அவர் பார்க்க மாட்டார்!' என்று பதில் வந்தது.

உமாவின் உடைகள் எல்லாம் கிழிந்து கந்தலாக இருந்தன. காவலாளிகள் அவளை ஒரு பிச்சைக்காரி என்று எண்ணிக்கொண்டனர்.

உமாவுக்கு அழுகை வந்தது. ஆயினும் அவள் முயற்சியைக் கைவிடவில்லை. வாசற் படியில் காத்துக்கிடந்தாள். இளவரசருக்கு அன்று திருமணம் நடக்கப் போவதாக வேலைக்காரர்கள் பேசிக் கொண்டனர்.

'என்னை இளவரசர் மறந்துவிட்டாரா? நான் என்ன செய்வேன்?' என்று கண்ணீர் வடித்தாள்.

'எழுந்துபோய் விடலாமா?' என்று எண்ணினாள். அதே சமயத்தில் இளவரசர் வெளியில் வந்தார். கந்தல் துணி

யுடன் நின்ற உமாவை அவருக்கு அடை யாளம் தெரியவில்லை. பிறகு உற்றுப் பார்த்து 'என் கண்மணி உமா!' என்று அவளைக் கட்டிக் கொண்டார்.

'நீ எப்படி இவ்வளவு தூரம் வந் தாய்? என் சாபம் நீங்கிற்று. இனி நமக்கு நல்ல காலம்! எனக்கு விடுதலை கிடைத்துவிடும்,' என்று தன் மகிழ்ச்சி யைத் தெரிவித்தார்.

'இன்று தங்களுடைய திருமணம் நடக்கப் போவதாகக் கேள்விப்பட் டேன்,' என்ருள்.

'ஆம், நீதான் மணமகள். மந்திரக் காரி வருவதற்குள் திருமணத்தை முடித்துவிடலாம்,' வா, என்று கோவி லுக்கு அழைத்துச் சென்ருர்.

கந்தல் துணியுடன் உமா இளவர சரை மணந்து கொண்டாள். வாடைக் காற்று மணமக்களைப் பழைய அரண் மனைக்குத் தூக்கிச் சென்றது. அவர்கள் அரசனும் அரசியுமாக நெடுங்காலம் இன்பமுடன் வாழ்ந்து வந்தனர்.

பெரிய பெருமாள்



பெருமாள் நல்ல பையன். அவனுக்கு இரண்டு அண்ணன் இருந்தார்கள். அரண்மனையில் வேலை பார்த்து வந்தார்கள். ஒரு அண்ணனுக்குத் தோட்ட வேலை. மற்றோர் அண்ணனுக்குக் குதிரைகளைப் பார்த்துக்கொள்ளும் வேலை. பெருமாள் பெரியவனாக வளர்ந்து விட்டான். அரண்மனையில் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை, இருந்தாலும் அரண்மனையில் சமையல்காரர்களுக்கு அவன் உதவி செய்துவந்தான். அவன் சுறுசுறுப்பாகவும் சிரித்த முகத்தோடும் இருந்தான். அரண்மனை வேலைக்காரர்

களுக்கு எல்லாம் பெருமாளைப் பிடிக்கும்.

ஆனால் இரண்டு அண்ணன்களுக்கும் அவனைப் பிடிக்கவில்லை. அவனைப் பார்த்துப் பொறாமைப்பட்டார்கள்.

'அவனை மட்டும் எல்லோரும் கொண்டாடுகிறார்கள். தூக்கித் தலைமேல் வைத்துக்கொள்கிறார்கள். அவனுக்கு முன்னால் நாங்கள் வேலைக்கு வந்தோம். மாடுபோல் உழைக்கிறோம். எங்களைத் தட்டிக்கொடுப்பவர்கள் யாருமில்லை,' என்று சலித்துக்கொண்டார்கள். அரண்மனையைவிட்டுத் துரத்துவதற்கு ஏற்பாடு செய்தனர்.

அரண்மனைக்குப் பின்னால் ஒரு பெரிய காடு இருந்தது. காட்டிற்குள் மரத்தினால் கட்டிய வீடு ஒன்று இருந்தது. அந்த வீட்டில் ஒரு பூதம் குடி இருந்தது. அதனிடம் ஏழு பொன் வாத்துக்கள் இருந்தன.

ஒருநாள் குதிரைக்கார அண்ணன் அரசரிடம் வந்தான். பொன் வாத்துக்களைப் பற்றி அரசனிடம் சொன்னான்.

'என் தம்பி பெருமாள் அந்த வாத்துக்களைப் பிடித்துக் கொண்டு வருகிறேன் என்று சொல்கிருன்; அவனுல் முடியுமா?' என்று கேட்டான்.

'அவனை உடனே என்னிடம் வரச் சொல்,' என்று அரசன் உத்திரவிட்டான்.

பெருமாள் அரசன் முன்னுல் வந்து நின்ருன். 'பொன் வாத்துக்களைப் பிடிக்க முடியும் என்று சொல்லி இருக்கிருய் அல்லவா? உடனே போய் அவைகளைப் பிடித்துக்கொண்டு வா,' என்று அரசன் ஆணையிட்டான்.

'நான் அப்படிச் சொல்லவில்லையே. பொன் வாத்துக்களை யாராலும் பிடிக்க முடியாது. பிடித்தால் பூதம் வந்து விடும்,' என்ருன்.

'என்னுல் பிடிக்க முடியும் என்று பெருமையாகப் பேசினுய். அதனுல் நீதான் போகவேண்டும். இல்லாவிடில் உன் தலை போய்விடும்,' என்று அரசன் அதட்டினுன்.

'அரசன் கையில் சாவதைவிட பூதத்திடம் போய்ப்பார்க்கலாம்,' என்று பெருமாள் நினைத்தான். ஒரு 'மூட்டை நெல்லும் ஒரு பெரிய வலையும் வேண்டும்' என்றான்.

அரசன் பெருமாளிடம் நெல்லும் வலையும் கொடுத்தான். பெருமாள் அவைகளை எடுத்துக்கொண்டு காட்டை நோக்கி நடந்தான். வழியில் ஒரு பெரிய ஏரி வந்தது. ஒரு படகில் ஏறிச் சென்றான். ஏரிக்கு அப்பால் புதர்களின் நடுவில் பூதத்தின் வீடு தெரிந்தது.

கதவு மூடப்பட்டு இருந்தது. படகைப் புதர்களுக்குள் மறைத்து வைத்தான். ஏரிக்கரையில் நெல்லைப் பரப்பி வைத்தான். பிறகு புதருக்குள் ஒளிந்து கொண்டான்.

சிறிது நேரத்தில் ஏழு பொன்வாத்துக்களும் வந்து நெல்லைப் பொறுக்கித் தின்றன. பெருமாள் மெதுவாக வெளியில் வந்து வலையை விரித்து வாத்துக்களின்மேல் வீசினான். ஏழு வாத்துக்களும் வலையில் அகப்பட்டுக்கொண்டன.

வாத்துக்களை வலையில் கட்டிப் படகில் தூக்கிவைத்தான்.

படகைத் திருப்பினான். அதே சமயத்தில் பூதம் வந்து நின்றது. பரட்டைத்தலை. கோரைப்பற்கள். முட்டைக் கண்கள். அதுபோன்ற உருவத்தைப் பெருமாள் பார்த்ததே கிடையாது.

'அடே திருட்டுப் பயலே! என் வாத்துக்களைக் கொடுக்கிறாயா அல்லது உன்னை உயிரோடு விழுங்கி விடவா?' என்று பூதம் கேட்டது.

'எங்கள் அரசருக்காகக் கொண்டு போகிறேன்,' என்று பெருமாள் படகைச் செலுத்தினான்.

'வருகிறாயா இல்லையா? உன்னைக் கொன்றுவிடுவேன்,' என்று பூதம் அதட்டிற்று.

'நாளைக்கு வருகிறேன்,' என்று சொல்லிவிட்டுப் படகை வேகமாக ஓட்டிக்கொண்டு போய்விட்டான். பூதம் தண்ணீருக்குள் இறங்க முடியவில்லை.

பெருமாள் அரசரிடம் சென்று பொன் வாத்துக்களைக் கொடுத்தான். அரசர் மகிழ்ச்சி அடைந்தார். அவனைத் தன் அருகில் சொந்த ஆளாக வைத்துக் கொண்டார். இரண்டு அண்ணனுக்கும் பொறாமைத் தீ பற்றி எரிந்தது.

பூதத்திடம் ஒரு தங்கவீணை இருப்பதாகக் கேள்விப்பட்டனர். தோட்டக்கார அண்ணன் அரசரை அணுகினான்,

'பூதம் ஒரு தங்க வீணை வைத்திருக்கிறதாம். அவ்வீணை யாரும் தொடாமல் தானாக வாசிக்கிறதாம். தம்பி அதைப் பார்த்திருக்கிறான். சோம்பேறித்தனத்தினால் அதைக் கொண்டுவரவில்லை,' என்று மூட்டிக் கொடுத்தான்.

அரசர் பெருமாளை அழைத்தார். 'ஏன் சோம்பேறி ஆகிவிட்டாய்? உன் கடமையை மறக்கலாமா? உடனே பூதத்தின் தங்கவீணையைக் கொண்டுவந்து என்னிடம் கொடு,' என்று கட்டளை இட்டார்.

'பூதம் தங்கவீணை வைத்திருப்பது எனக்குத் தெரியாது,' என்ருன்.

'அதெல்லாம் எனக்குத் தெரியாது. நாளைக்குச் சூரிய உதயத்திற்குள் வீணையுடன் வந்து சேரவேண்டும்,' என்று உத்தரவிட்டார்.

பெருமாள் பத்து நாட்களில் கொண்டு வருவதாக வாக்குறுதி அளித்தான். ஒரு மூங்கிலும் ஓர் இரும்புக் கம்பியும் ஒரு மெழுகுவத்தியும் எடுத்துக்கொண்டு புறப்பட்டான். படகில் ஏறிச் சென்று பூதத்தின் வீட்டை அடைந்தான். கதவைத் தட்டிஞன். கதவு திறந்தது. பூதம் அவன் எதிரில் வந்து நின்றது.

'நீதாஞ வாத்துத் திருடியவன்?' என்று கண்களை உருட்டிப் பார்த்தது.

'அரசர் அனுப்பினர். அதனல் வந்தேன்; கோபித்துக்கொள்ள வேண்டாம்,' என்றான்.

'அப்படி ஆனல் உள்ளே வா,' என்று பூதம் அழைத்துச் சென்றது. உடனே கதவை மூடிற்று. அவனைப் பிடித்து ஓர் இரும்புக் கூண்டில் அடைத்துவிட்டது.

'உன்னைக் கொழுக்க வைத்துச் சாப்பிடவேண்டும். அதனல் விட்டு வைக்கிறேன்,' என்று அவனிடம் கூறிற்று. பெருமாளுக்கு மூன்று நாட்கள் அருமையான சாப்பாடு கிடைத்தது. மூக்குப் பிடிக்கச் சாப்பிட்டான்.

மூன்ருவது நாள் பூதம் கூண்டின் அருகில் வந்து நின்றது. 'ஒரு விரலை மட்டும் வெளியில் நீட்டு! கொழுப்பு ஏறி இருக்கிறதா பார்க்கலாம்,' என்றது.

பெருமாள் விரலை நீட்டவில்லை. இரும்புக் கம்பியின் ஒரு முனையைக் காட்டினன். பூதம் அதை நசுக்கிப் பார்த்தது. 'எலும்பு மாதிரி இருக்கிறது. சதைப் பற்றுக் கூட இல்லை', என்று

சொல்லி அவனுக்கு நிறையத் தீனி கொடுத்தது.

மூன்று நாட்கள் கழித்துப் பூதம் திரும்பிவந்தது. 'விரலை வெளியில் நீட்டு, பார்க்கலாம்', என்றது.

இம்முறை பெருமாள் மூங்கிலின் நுனியைக் காட்டினன். 'கொஞ்சம் பருத்திருக்கிருய். பொறுத்துப் பார்க்க லாம்', என்று சொல்லி நிறையத் தீனி கொடுத்தது.

இன்னும் மூன்று நாட்கள் கழிந் தன. பூதம் மறுபடியும் வந்து விரலை நீட்டச் சொல்லிற்று. பெருமாள் மெழுகு வத்தியை நீட்டினன். பூதம் தொட்டுப் பார்த்தது.

'இப்பொழுதுதான் பக்குவமாக இருக்கிறது', என்று ஓடிப்போய் ஒரு பெரிய கத்தியை எடுத்துக்கொண்டு வந்தது. 'வெளியே வா', என்று அழைத்தது. 'எனக்கு ஏளு கண் மங்கலாக இருக்கிறது; நீ உள்ளே வந்து அழைத்துச்செல்', என்று பெருமாள் சொன்னன்.

பூதம் கூண்டிற்குள் வந்தது. பெருமாள் ஒரே பாய்ச்சலில் வெளியில் குதித்தான். கூண்டின் கதவை அடைத்துத் தாளிட்டான். பூதம் கூண்டிற்குள் அகப்பட்டுக் கொண்டது.

பூதம் கூண்டை இடித்துப் பார்த்தது. கூச்சல் போட்டது. ஒன்றும் முடியவில்லை. பெருமாள் தங்கவீணையை எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தான்.

படகில் ஏறி அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். அரசர் பெருமகிழ்ச்சி அடைந்தார். மந்திரவீணையைக் கண்டு எல்லோரும் வியப்படைந்தனர்.

அரசர் தன் மகளைப் பெருமாளுக்கு மணம்செய்து கொடுத்தார். அவனுக்கு அரச பதவியும் கொடுத்தார். குதிரைக்கார அண்ணனும் தோட்டக்கார அண்ணனும் பெருமாளிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டனர். பெருமாள் அவர்களுக்கு உயர்ந்த வேலைகளைக் கொடுத்தான். மரியாதையுடன் நடத்தினான். எல்லோரும் இன்பமாகவாழ்ந்து வந்தனர்.

ஒளி வட்டம்

அழகப்பன் என்னும் வேடன் ஒருவன் இருந்தான். அவன் உயரமாகவும் ஒல்லியாகவும் இருந்தான். வேட்டையாடுவதில் மிகவும் கெட்டிக்காரன். ஒருநாள் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். நெடுந்தூரம் போனான். என்றும் காணாத புதிய இடத்திற்கு வந்து சேர்ந்தான்.

மாலை வந்தது. செவ்வானம் தோன்றியது. சூரியன் மேற்கில் மலைகளுக்குப் பின்னால் போய் மறைந்தது. சிவந்த ஒளி மட்டும் தெரிந்தது. வீடு திரும்ப

வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று எண்ணினான். ஒற்றை அடிப்பாதை வழியாக வந்தான். ஒரு வட்டமான ஒளி தரையில் வீசிற்று. அதில் காலடிகள் ஒன்றும் தெரியவில்லை. வேடன் அதை உற்றுப் பார்த்தான். 'இதென்ன நடைபாதைபோல் தெரிகிறது? ஆனால், எங்கே போய்ச் சேர்கிறது என்று தெரியவில்லையே!' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். கீழே குனிந்து ஒளி வீசும் இடத்தைத் தொட்டுப் பார்த்தான். அது எப்படி வந்தது, எதற்காக ஏற்பட்டது என்று அவனுக்குத் தெரியவில்லை.

இன்னிசையின் ஒலி கேட்டது. அது வரை அவன் கேட்டிராத இனிய ஒலியாக இருந்தது. அதைக் கேட்டு மரம் போல் அசைவற்று நின்றான். அந்த இனிய இசை வானத்திலிருந்து வருவது போல் தோன்றியது. மேலே நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்ணுக்கு ஒன்றும் தெரியவில்லை. நெடுந்தொலைவில் ஒரு வெண்மையான மேகம் அசைவது போல் தெரிந்தது.

இசையின் ஒலி சற்று அதிகமாகக் கேட்டது. மேகமும் கொஞ்சம் பெரிதாகத் தெரிந்தது. அது நெருங்கி வந்ததும் ஒரு வெண்மையான கூடை என்று தெரிந்தது. அது மிகவும் அழகியது. அதன் உள்ளே பன்னிரண்டு அழகிகள் அமர்ந்திருந்தனர். அவர்கள் பாடிக் கொண்டே வந்தனர். அவர்களுடைய குரலின் இனிய இசைதான் முதலில் அவனுக்குக் கேட்டது. ஒவ்வொருவரும் கையில் ஒரு தாளம் வைத்திருந்தனர். எல்லோரும் தாளத்தோடு இனிமையாகப் பாடினார்கள்.

கூடை மிதந்துகொண்டே தரையில் இறங்கி ஒளி வட்டத்திற்குள்ளே வந்து சேர்ந்தது. பெண்கள் கீழே குதித்து வட்டமாக வளைந்து ஒளிப் பாதைக்குள் அழகாக ஆடினர். பிறகு ஒரு பளபளப்பான பந்தை வீசி எறிந்தும் பிடித்தும் விளையாடிக் கொண்டிருந்தனர். பந்தில் வீசிய சிவப்பு ஒளி அவர்களுடைய முகத்தில் பட்டது.

அழகப்பன் பல இடங்களில் நாட்டியம் பார்த்திருந்தான். இதைப் போன்ற நடனம் அவன் எங்கும் கண்டதில்லை. இசையும் அற்புதமாக அமைந்திருந்தது. ஆடுகின்றவர்களும் புதிய மலர்களைப்போன்று அழகுடன் விளங்கினர். அவர்கள் வட்டமாக ஆடியது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அழகப்பன் புதர்களின் பின்னல் மறைந்து நின்று அந்த வேடிக்கையைப் பார்த்தான். பன்னிரண்டாவது பெண் மற்றவர்களைவிட அழகில் சிறந்து விளங்கினாள். அவளுடைய இனிய குரலும் அழகிய ஆடலும் அழகப்பனுக்கு மிகவும் பிடித்திருந்தன.

' இப் பெண்ணை வீட்டிற்கு அழைத்துச் சென்று மணம் செய்து கொண்டால் என்ன ?'' என்று அழகப்பன் ஆசைப்பட்டான். பெண்கள் ஆடிக்கொண்டே இருந்தனர். 'அவள் அருகில் போய்ப் பார்க்கலாமா ?' என்று நினைத்தான். அதற்குள் அவர்கள் எல்லோரும் கூடையில் ஏறிப் பறந்து சென்

றனர். கூடை வானத்தில் பறந்து போயிற்று. இசையின் ஒலியும் சிறிது சிறிதாகக் குறைந்து முடிவில் மறைந்து விட்டது.

அழகப்பன் வருத்தமடைந்தான். 'இனியும் அவர்களைக் காண்பேனு?' என்று ஐயம் கொண்டான். அவன் ஒரு பெரிய வீரன்தான். பகைவர்களை யெல்லாம் வென்றவன்தான். இப்பொழுது அந்த அழகியை நினைந்து மனம் உருகினுன். கண்ணீருடன் வீடு திரும்பினுன்.

அவளை எப்படியாவது சந்திக்க வேண்டும் என்று முயற்சி செய்தான். மறுநாள் ஒளிவட்டம் இருக்கும் இடத்திற்கு வந்து அருகில் புதரில் மறைந்து நின்ருன். முதல்நாள் கேட்ட இன்னிசை காற்றில் மிதந்து வந்தது. கூடையும் வந்தது. பன்னிரண்டு பெண்களும் முன்போலவே பூமியில் இறங்கி வட்டமாக நாட்டியம் ஆடினுர்கள். அழகப்பன் மெதுவாக அவர்களிடம் அணுகினுன். அவனைக் கண்டவுடன் எல்லோரும்

கூடையில் ஏறிப் பறந்து போய்விட்டனர். அவர்கள் பாடிக் கொண்டே மேகத்தில் மறைந்தனர்.

அழகப்பன் மனம் வருந்தி வீடு திரும்பினுன். அன்று இரவு அவன் உறங்கவில்லை. பொழுது விடிந்ததும் ஒளிவட்டம் இருக்கும் இடத்திற்குச் சென்ருன். மக்களைக் கண்டால் அப் பெண்கள் ஓடிவிடுகின்றனர். அதனுல் அவன் ஓர் எலியின் உருவத்தை எடுத்துக்கொண்டு அங்கு விளையாடிக் கொண்டிருந்தான்.

வானத்திலிருந்து கூடை பறந்து வந்து பூமியில் இறங்கியது. பன்னிரண்டு பெண்களும் கீழே குதித்து நாட்டியம் ஆடத் தொடங்கிஞர்கள். காய்ந்து போன மரத்துண்டு ஒன்று கீழே கிடந்தது. எலி மரத்தின் பொந்தில் புகுந்து கொண்டது. பன்னிரண்டாவது பெண் அந்த மரத்தைக் கீழே உருட்டி விளையாடிஞள். மற்றவர்களும் அதன் மேல் குதித்து விளையாடிஞர்கள். அதன் உள்ளே எலி உருவத்துடன் பொறுமை

யோடு இருந்த அழகப்பன் திடீரென்று தன் பழைய உருவத்தை எடுத்துத் தன் அருகில் வந்த அழகியைப் பிடித்துக் கொண்டான். திருமணம் செய்து கொள்ள விரும்பிய பெண் அவனிடம் அகப்பட்டுக் கொண்டாள். மற்றப் பெண்கள் எல்லாரும் கூடையில் ஏறிப் பறந்து போய்விட்டனர்.

எல்லோரும் போய்விட்டதால் அப் பெண் அழத்தொடங்கினாள். அழகப்பன் அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டான். அவளிடம் அன்போடு பேசினான். அவளுக்கு அச்சம் நீங்கி அவனிடம் நம்பிக்கை பிறந்தது.

தன்னுடைய வீரச் செயல்களைப் பற்றி அவளிடம் சொன்னான். 'வேடர்களுக்குத் தலைவன் ஆகிவிடுவேன்', என்றான். அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

தெய்வப் பெண் ஒரு வேடனை மணந்துகொண்டாள். திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மணப் பெண்ணைக் காண்பதற்கு ஊரிலுள்ள

மக்கள் அனைவரும் திரண்டு வந்தனர். அழகப்பன் அவளுக்கு ஓர் அழகிய வீடு கட்டிக்கொடுத்தான். அழகப்பன் வேட்டையாடச் செல்வான். அழகி வீட்டிலிருந்து சமையல் செய்வாள். இருவரும் இன்பமுடன் காலம் கழித்து வந்தனர்.

ஓர் ஆண்டுக்குப்பின் தெய்வப் பெண்ணுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. சில ஆண்டுகள் கழிந்தன. தான் மணம் செய்துகொண்டது தெய்வப் பெண் என்பதை அழகப்பன் மறந்துவிட்டான். அவள் மீண்டும் வான உலகத்திற்குப் போக வேண்டியவள் தானே! கணவனிடமும் மகனிடமும் அன்பு

பாராட்டி வந்தாள். ஆயினும் அவளுடைய மனம் ஒரு நிலையில் இல்லை. மேல் உலகத்திற்குப் போக வேண்டும் என்ற எண்ணம் வந்துவிட்டது.

ஒருநாள் அழகப்பன் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து, பறக்கும் கூடை ஒன்று செய்தாள். அதில் அழகிய பறவைகளையும் செடி கொடிகளையும் மலர்களையும் வைத்து ஒளி வட்டத்திற்குள் கொண்டு போய் வைத்தாள். தன் மகனை இடுப்பில் வைத்துக் கொண்டு கூடையில் ஏறி நின்றாள். தான் மற்றத் தெய்வப் பெண்களுடன் பாடிய பாடலை இசையுடன் பாடினாள். கூடை வானத்தில் பறந்து சென்றது.

அழகப்பனுக்குப் பாட்டின் இனிய ஒலி கேட்டது. தன் மனைவியின் குரல் என்று தெரிந்ததும் ஒளி வட்டத்தின் அருகில் ஓடி வந்தான். அதற்குள் கூடை பறந்து விட்டது. வானில் ஒரு மேகம்போல் தெரிந்தது. இசையின் ஒலியும் நின்று விட்டது

அழகப்பன் மனைவியையும் மகனை யும் பிரிந்து மிகவும் வேதனை அடைந் தான். பல ஆண்டுகள் சென்றன. அவர் கள் திரும்பி வரவில்லை. அழகப்பன் உடல் இளைத்துத் துரும்புபோல் ஆனது. வானுலகிற்குச் சென்ற பையன் பெரிய வன் ஆனபிறகு 'அப்பா எங்கே?' என்று தாயிடம் கேட்டான். 'அப்பா விடம் கொண்டுபோய் விடு,' என்று தொந்தரவு செய்தான்.

தெய்வப் பெண் தன் மகனுடன் பறக்கும் கூடையில் ஏறிக்கொண்டு பூமிக்கு வந்தாள். அழகப்பன் ஒளிவட் டத்தின் அருகில் காத்துக் கிடந்தான். மனைவியையும் மகனையும் கண்டு பெரு மகிழ்ச்சி அடைந்தான். அவர்களை வீட் டிற்கு அழைத்துச் சென்றான். இரண்டு மூன்று நாட்கள் வரையில் கணவ னுடன் தங்கி இருந்தாள். பறக்கும் கூடை பெரியதாகச் செய்தாள். சிறிய பறவைகளையும் விலங்குகளையும் கிடைத்த வரையில் கூடையில் ஏற்றி னாள். கணவனையும் தன்னுடன் அழைத்

துக்கொண்டு மேல் உலகத்திற்குப் புறப்பட்டாள்.

அழகப்பன் கொண்டு வந்த பொருள்களைக் கண்டு அவ்வுலகிலுள்ளவர்கள் வியப்புற்றனர். வந்தவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு பரிசு கொடுத்து அனுப்பினான். அங்கே ஓர் அற்புதம் நிகழ்ந்தது. பறவையைத் தொட்டவர்கள் பறவைகளாக மாறிவிட்டனர். விலங்குகளை எடுத்தவர்கள் விலங்குகளாக மாறினர். அழகப்பனும் அவன் மனைவியும் மகனும் கழுகுகளாக மாறிப் பூமிக்குப் பறந்து சென்றனர்.

பூமியை அடைந்தவுடன் அவர்களுக்குப் பழைய உருவங்கள் வந்து விட்டன. தெய்வப்பெண் அழகப்பனுடன் இன்பமாக வாழ்ந்து வந்தாள். மீண்டும் கணவனை விட்டுப் பிரிய அவளுக்கு மனம் வரவில்லை. விண்ணுலகத்தை மறந்து மண்ணுலக வாழ்க்கையை மேற்கொண்டாள்.